பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

04 08 2024 **SUNDAY** 7 15 **PM**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. புதிய குற்றவியல் சட்டங்கள் தொடர்பான நான்கு இணையதள செயலிகளை உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா இன்று சண்டிகரில் தொடங்கி வைத்தார்.

2. அஸ்ஸாம் மாநிலத்தில் அமையவுள்ள செமிகண்டக்டர் தொழிற்சாலை 28 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பை அளிக்கும் என்று மத்திய அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

3. வேளாண் துறையில் இந்தியா பல்வேறு சாதனைகளை படைத்துள்ளதாக சர்வதேச வேளாண் பொருளாதார நிபுணர்கள் கூறியுள்ளனர்.

4. கேரள மாநிலம், வயநாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் தொடர்பான அறிக்கையை மத்திய இணையமைச்சர் திரு. ஜார்ஜ் குரியன் இன்று பிரதமர் திரு. நரேந்திர மோடியிடம் சமர்ப்பித்தார்.

5. கொழும்பில் நடைபெற்று வரும் இரண்டாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா வெற்றி பெற 241 ரன் என்ற இலக்கை இலங்கை அணி நிர்ணயித்துள்ளது.

>>>><<<<

புதிய குற்றவியல் சட்டங்கள் தொடர்பான நான்கு இணையதள செயலிகளை மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா இன்று சண்டிகரில் தொடங்கி வைத்தார்.

**e-sakshya,** நியாயசேது, நியாயஸ்ருதி மற்றும் இ-சம்மன் ஆகிய இந்த செயலிகள் குற்றவியல் சட்டங்களை விரைந்து நடைமுறைப்படுத்துவதற்கு உதவும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, இதுகுறித்து சமூகவலைதளத்தில் பகிர்ந்து கொண்டுள்ள திரு. அமித் ஷா, குற்றவியல் நீதித்துறையில் உறுதியான கட்டமைப்பை உருவாக்குவதற்கு இந்த நான்கு இணையதள செயலிகளும் உதவிடும் என்று குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக, **Manimajra-**வில் 24 மணி நேரமும் செயல்படும் குடிநீர் விநியோக கட்டமைப்பையும் அவர் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர், 75 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டுள்ள இந்த குடிநீர் விநியோக கட்டமைப்பின் மூலம் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் பயன்பெறுவார்கள் என்று தெரிவித்தார்.

12 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீடுகளுக்கு புதிய குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்படும் என்றும் திரு. அமித் ஷா கூறினார்.

>>>><<<<

அஸ்ஸாம் மாநிலத்தில் அமையவுள்ள செமிகண்டக்டர் தொழிற்சாலை 15 ஆயிரம் பேருக்கு நேரடியாகவும், 13 ஆயிரம் பேருக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்பை அளிக்கும் என்று மத்திய மின்னணு தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் இத்தகவலை தெரிவித்த அவர், 27 ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டுடன் அஸ்ஸாம் மாநிலம் **Morigoan**–ல் அமையவுள்ள இந்த செமிகண்டக்டர் தொழிற்சாலைக்கான கட்டுமானப் பணிகள் ஏற்கனவே தொடங்கிவிட்டதாக கூறினார்.

இந்த தொழிற்சாலை மூலம் ஒரு நாளைக்கு 4 கோடியே 83 லட்சம் செமிகண்டக்டர் **Chip**–களை தயாரிக்க முடியும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

>>>><<<<

கேரளாவில் நிலச்சரிவால் பாதிக்கப்பட்டுள்ள வயநாட்டில் மீட்புப் பணிகள் ஆறாவது நாளாக இன்றும் நீடிக்கிறது. பாதுகாப்புப் படையினர் மற்றும் தேசிய பேரிடர் மீட்புப் படையினர் இப்பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரண உதவிகளையும் இவர்கள் வழங்கி வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார். உயிரிழந்தவர்களின் உடல்களை மீட்கும் வகையில் ட்ரோன்களும் பயன்படுத்தப்படுவதாக அவர் மேலும் கூறுகிறார். மீட்புப் பணிகளில் தொடர்பில்லாதவர்கள் பாதிக்கப்பட்ட பகுதியை பார்வையிட செல்ல வேண்டாம் என்று அம்மாநில அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

உயிரிழந்தோரின் உடல்கள் உரிய பிரேத பரிசோதனைக்குப் பின்னர், உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டு வருகின்றன. இதுவரை உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 308-ஆக அதிகரித்துள்ளது என்று கேரள அரசு தெரிவித்துள்ளது. இந்நிலையில், கேரள மாநிலம், வயநாட்டில் நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட இடங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் தொடர்பான அறிக்கையை மத்திய இணையமைச்சர் திரு. ஜார்ஜ் குரியன் இன்று பிரதமர் திரு. நரேந்திர மோடியிடம் சமர்ப்பித்தார்.

இந்த அறிக்கையில், வயநாட்டில் ராணுவம் மற்றும் மத்திய அமைப்புகள் மேற்கொண்ட மீட்புப் பணிகள் குறித்து விரிவாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனிடையே. நிலச்சரிவினால் காயமடைந்து மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருபவர்களை மத்திய இணையமைச்சர் திரு. சுரேஷ் கோபி நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு தரமான சிகிச்சை அளிக்கப்படும் என்றும் மத்திய அரசு தேவையான உதவிகளை செய்து தரும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

>>>><<<<

வேளாண் துறையில் இந்தியா பல்வேறு சாதனைகளை படைத்துள்ளதாக சர்வதேச வேளாண் பொருளாதார நிபுணர்கள் கூறியுள்ளனர்.

புதுதில்லியில் நடைபெற்று வரும் சர்வதேச வேளாண் பொருளாதார நிபுணர்கள் பங்கேற்றுள்ள ஆறுநாள் மாநாட்டில் உரையாற்றிய பங்களாதேஷைச் சேர்ந்த திருமதி. **Hasmin,** வேளாண் துறையில் இந்தியா படைத்துள்ள சாதனைகளை பட்டியலிட்டார்.

வேளாண் கல்வி மற்றும் கட்டமைப்பு வசதி, அத்துறையின் வளர்ச்சியில் முக்கியப் பங்காற்றுவதாக திருமதி. **Hasmin** தெரிவித்தார்.

கென்யாவின் சார்பில் பங்கேற்ற பிரதிநிதி திரு. **Dodo Makwal,** வேளாண் ஆராய்ச்சி பணிகளில் இந்தியாவின் பங்கு மகத்தானது என்று குறிப்பிட்டார்.

பல்வேறு நாடுகளுக்கு இந்தியா உணவுப் பொருட்களை விநியோகம் செய்து வருவதையும் திரு. **Dodo Makwal** சுட்டிக்காட்டினார்.

ஜப்பான் சார்பில் பங்கேற்ற பிரதிநிதி திருமதி. **Sobren** வேளாண் துறையில் பாரம்பரியத்தையும், நவீன தொழில்நுட்பத்தையும் இந்தியா கொண்டிருப்பது சிறப்பு அம்சமாகும் என்று கூறினார்.

இந்த மாநாட்டில் 75 நாடுகளின் பிரதிநிதிகள் பங்கேற்றுள்ளனர்.

**>>>><<<<**

குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு இன்று **Fiji** புறப்பட்டுச் செல்கிறார்.

அந்நாட்டு தலைவர்களுடன் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது குறித்து குடியரசுத் தலைவர் விவாதிக்கவுள்ளார்.

இதனை தொடர்ந்து அந்நாட்டு நாடாளுமன்றத்திலும் திருமதி. திரௌபதி முர்மு உரையாற்றுகிறார்.

பின்னர், நியூஸிலாந்து செல்லும் குடியரசுத்தலைவர், வெலிங்டனில் சர்வதேச கல்வி மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகிறார்.

நியூஸிலாந்து பயணத்தை முடித்துக் கொண்டு, **Timor Leste** செல்லும் திருமதி. திரௌபதி முர்மு அந்நாட்டு தலைவர்களுடன் ஆலோசனை மேற்கொள்கிறார்.

இந்த மூன்று நாடுகள் பயணத்தின் போது, அங்குள்ள இந்திய வம்சாவளியினருடனும் அவர் கலந்துரையாடவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

குடியரசுத் தலைவரின் மூன்று நாடுகள் பயணம், இந்தியாவின் கிழக்கத்திய வெளியுறவு கொள்கைக்கு வலு சேர்க்கும் வகையில் அமையும் என்று எமது செய்தியாளர் மேலும் தெரிவிக்கிறார்.

>>>><<<<

புதுச்சேரி முதலமைச்சர் திரு. ரெங்கசாமியின் பிறந்த நாளை முன்னிட்டு, தலைவர்கள் பலர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

புதுச்சேரியின் வளர்ச்சிக்காக பல்வேறு தொடர் நடவடிக்கைகளை திரு. ரெங்கசாமி மேற்கொண்டு வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய இணையமைச்சர் திரு. எல். முருகன் விடுத்துள்ள செய்தியில் சமுதாயப் பணிகளை திரு. ரெங்கசாமி தொடர்ந்து மேற்காள்ள வாழ்த்துவதாக குறிப்பிட்டுள்ளார்.

தமிழக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில் திரு. ரெங்கசாமி நீண்ட காலம் நல்ல உடல்நலத்துடனும், மகிழ்ச்சியுடனும் வாழ வேண்டும் என வாழ்த்தியுள்ளார்.

>>>><<<<

தமிழகத்தில் சேலம், தருமபுரி, ஈரோடு, தஞ்சாவூர் உள்ளிட்ட காவிரி ஆற்றங்கரையோரம் வசிக்கும் மக்களை வெள்ள பாதிப்பிலிருந்து பாதுகாக்க தேவையான அளவு முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளதாக மாநில அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் கூறியுள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் 50 இடங்களில் மருத்துவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும், தேவைக்கேற்ப கூடுதல் முகாம்களை அமைத்துக் கொள்ள மருத்துவ அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இன்றும் இந்த முகாம்கள் மூலம், பொதுமக்களுக்கு தேவையான மருத்துவ உதவிகள் வழங்கப்பட்டிருப்பதாகவும் திரு. மா. சுப்பிரமணியன் கூறினார்.

முன்னதாக, எழும்பூர் அரசு குழந்தைகள் நல மருத்துவமனையில் கட்டப்பட்டு வரும் விடுதி கட்டிடத்திற்கான கட்டுமானப் பணிகளையும் அமைச்சர் ஆய்வு செய்தார்.

>>>><<<<

தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்பதற்கான இணையதள முன்பதிவை மாநில விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

மாநில அளவில் நடைபெறும் தனிநபர் போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்கு முதல் பரிசாக ஒரு லட்சம் ரூபாயும், இரண்டாம் பரிசாக 75 ஆயிரம் ரூபாயாகவும், மூன்றாம் பரிசாக 50 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படுகிறது.

குழு போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்கு முதல் பரிசாக தலா 75 ஆயிரம் ரூபாயும், இரண்டாம் பரிசாக 50 ஆயிரம் ரூபாயும், மூன்றாம் பரிசாக 25 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படும்.

பள்ளி மாணவர்களுக்கு இரண்டு பிரிவிலும், பொதுப் பிரிவினருக்கு ஒரு பிரிவிலும், அனைத்து வயது மாற்றுத் திறனாளிகள் மற்றும் மாநில அரசு ஊழியர்களுக்கும் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இப்போட்டிகளில் பங்கேற்க விரும்புவோர் இம்மாதம் 25ஆம் தேதிக்குள் இணையதளத்தில் பதிவு செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

>>>><<<<

தேசிய கைத்தறி தினம் வரும் 7ஆம் தேதி கொண்டாடப்படவுள்ளதை அடுத்து நாடுமுழுவதும் கைத்தறி மற்றும் கைவினைப் பொருட்கள் கண்காட்சிக்கு மத்திய துணிநூல் துறை ஏற்பாடு செய்துள்ளது.

இதன் ஒரு பகுதியாக, திருச்சி தலைமை அஞ்சல் நிலையத்தில் 20 சதவீத தள்ளுபடியில் கைத்தறி துணிகளின் கண்காட்சி மற்றும் விற்பனை நாளை முதல் வரும் 7 ஆம் தேதிவரை நடைபெறவுள்ளதாக திருச்சி மண்டல அஞ்சல்துறை தலைவர் தெரிவித்துள்ளார்.

>>>><<<<

பாரிஸ் ஒலிம்பிக் ஹாக்கிப் போட்டியில் இந்தியா அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற காலிறுதிப் போட்டியில், இந்தியா 4-2 என்ற கோல்கணக்கில் இங்கிலாந்து அணியை வென்றது.

>>>><<<<

பேட்மிண்டன் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் லக்ஷயா சென் டென்மார்க்கின் **Viktor Axelsen**-னிடம் தோல்வியடைந்தார்.

**Viktor Axelsen** 22-20, 21-14 என்ற நேர்செட்களில் வெற்றிபெற்றார்.

நாளை நடைபெறும் வெண்கலப் பதக்கத்திற்கான ஆட்டத்தில் லக்ஷயா சென் விளையாடவுள்ளார்.

>>>><<<<

கொழும்பில் நடைபெற்று வரும் இரண்டாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா வெற்றிபெற 241 என்ற வெற்றி இலக்கை இலங்கை நிர்ணயித்துள்ளது.

>>>>END<<<<